## குளச்சல் நகராட்சி

**பொருள் எண்.1**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் நடவடிக்கைகள் செயல்முறை ஆணை எண்.ஆ3/1746/2015 நாள் 02.03.2016–ன் படி, பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2015–16–ன் கீழ், குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 17–வது வார்டு களிமார் மகாவிஷ்ணு கோவில் அருகில் படிப்பகம் கட்டுதல் பணியினை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் இந்கர்மன்றத் தீர்மானம் எண்.1490 நாள் 31.05.2016–ன் மூலம் இந்நகர்மன்றத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 22.06.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.ற்றி. சுகுமாரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.42 % குறைவு |
| 2 | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.59 % அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.ற்றி.சுகுமாரன், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.42 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.இ1/1903/2018

**தீர்மானம் எண்.1509, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.2**

தென்மேற்கு பருவமழையினை தொடர்ந்து, இந்நகராட்சி பகுதியில் கடந்த 19.05.2016 அன்று பெய்த பெருமழையினால் ஏ.வி.எம் கால்வாய் முழுவதும் நிரம்பி, கொட்டில்பாடு, அந்தோணியார் காலனி, ஜோசப் பெனடிக்ட் காலனி, சாம்பசிவபுரம் மற்றும் மரமடி பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்குள் கால்வாய் நீர் சென்று விட்டதால், பொது மக்கள் நலன் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், ஏ.வி.எம் கால்வாய் பகுதிகளில் காணப்பட்ட அடைப்புகள் (Silt) மற்றும் ஆகாயதாமரை போன்ற செடிகளை 20.05.2016 மற்றும் 21.05.2016 ஆகிய இரு நாட்களும் அகற்றிய பணிகளை நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ், மேற்கொண்டு அதற்கான செலவுத் தொகை ரு.23,700/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.இ1/1473/1/2016

**தீர்மானம் எண்.1510, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் வினியோகப் பணிகளுக்கு தேவையான 4 பணியாளர்களை 89 நாட்களுக்கு (ஜுலை 2016 முதல் செப்டம்பர் 2016) பணிக்கு அமர்த்துவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1,20,000/– இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1492 நாள் 31.05.2016–ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 22.06.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.ற்றி. சுகுமாரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.61 % அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.ற்றி.சுகுமாரன், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.42 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.இ1/2691/2014

**தீர்மானம் எண்.1511, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின்படி, பணிகள் மேற்கொள்ள 11 நபர்கள் கொண்ட ஸ்டார் ஆண்கள் சுயஉதவிக் குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ள ஏப்ரல் 2016 முதல் ஜுன் 2016 வரை 89 நாட்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1484, நாள் 04.03.2016–ல் ஒப்புதல் பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளது. மேற்படி 11 நபர்கள் கொண்ட ஸ்டார் ஆண்கள் சுயஉதவிக்குழு மூலம் 89 நாட்களுக்கு (ஜுலை 2016 முதல் செப்டம்பர் 2016)வரை பணிக்கு அமர்த்த கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3,30,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.எச்1/1368/2014

**தீர்மானம் எண்.1512, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாமையால் பொது சுகாதார நலன் கருதி வடிகால்கள் தூர் வாருதல், அபேட் மருந்து தெளித்தல் ஆகிய பணிகளை தினமும் மேற்கொள்ள, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின்படி 17 நபர்கள் கொண்ட ஜெயம் பெண்கள் சுயஉதவிக்குழு மூலம் பணிகள் மேற்கொள்ள ஏப்ரல் 2016 முதல் ஜுன் 2016 வரை 89 நாட்களுக்கு இந்நகர்மன்ற துர்மானம் எண்.1483, நாள் 04.03.2016–ல் ஒப்புதல் பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டது. மேலும் 17 நபர்களை கொண்ட ஜெயம் பெண்கள் சுயஉதவிக்குழு மூலம் 89 நாட்களுக்கு ஜுலை 2016 முதல் செப்டம்பர் 2016 வரை மாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ1/110610/2013 நாள் 25.04.2013–ல் தெரிவித்துள்ள தினக்கூலி அடைப்படையில் பணிக்கு அமர்த்த கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.5,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.எச்1/1177/2014

**தீர்மானம் எண்.1513, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை நிலவேம்பு கசாயம் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதை தொடர்ந்து மாவட்ட அரசு சித்தா மருத்துவரிடம் நிலவேம்பு சூரணம் வழங்க கேட்டதற்கு பொது மக்களுக்கு குறைந்த அளவில் கொடுப்பதற்கு மட்டுமே அறிவுறுத்தப்பட்டுள்ளது. நகராட்சி மொத்தமாக வழங்க இயலாது என கூறிவிட்டார். ஏற்கனவே ஓராண்டிற்கு பள்ளிகளில் பணிலும் மாணவ, மாணவிகளுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்குவதற்கு கால அட்டவணை போடப்பட்டுள்ளது. எனவே கால அட்டவணையின்படி, மாணவ, மாணவிகளுக்கு நிலவேம்பு கசாயம் வழங்க போதிய அளவு இருப்பு இல்லாத காரணத்தினால் நிலவேம்பு சூரணம் 50 கிலோ வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ.85,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் நிலவேம்பு சூரணம் நகராட்சிப் பகுதிகளிலுள்ள முக்கிய பிரமுகர்கள் எவரேனும் வழங்க முன்வந்தால் அதனை ஏற்றுக்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.எச்1/2162/2012

**தீர்மானம் எண்.1514, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.7**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மினி ஆட்டோ எண்.TN 75 P 8424 –க்கு தகுதிசான்று புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1342, நாள் 30.09.2015–ல் மன்ற அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் கூடுதலாக பணிகள் பார்க்கப்பட்டதில் ரூ.4077/– பாரத் வீல்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.எச்1/1841/2014

**தீர்மானம் எண்.1515, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.8**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மினி ஆட்டோ எண்.TN 75 L 2565 –க்கு தகுதிசான்று புதுப்பிக்க வேண்டி அதற்கான பழுதுகளை ரூ.90,000/– மதிப்பீட்டில் சரி செய்வதற்கு, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1496 நாள் 31.05.2016–ன் படி அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் வடசேரி, நாகர்கோவில் | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | M/s.K.S.S.S ஆட்டோ மொபைல்ஸ் ஆசாரிப்பள்ளம் ரோடு, நாகர்கோவில் ர் | மதிப்பீட்டை விட 0.01 % அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் நாகர்கோவில் நிறுவனம் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் நாகர்கோவில் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கலாம்.

ந.க.எண்.எச்1/1841/2013

**தீர்மானம் எண்.1516, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.9**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான தளவாடப் பொருட்கள் வாங்குவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1494 நாள் 31.05.2016—ல் ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி கீழ்காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | Southern solidwaste management service, Mulagumoodu | மதிப்பீட்டை விட 0.83% குறைவு |
| 2 | Sri Muruga Enterprises Tirupattur | மதிப்பீட்டை விட 13 % அதிகம் |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் விலைப்புள்ளி அளித்துள்ள Southern solidwaste management service, Mulagumoodu நிறுவனத்திற்கு விலைப்புள்ளியை ஏற்று வினியோக உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.எச்1/1388/2009

**தீர்மானம் எண்.1517, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குட்பட்ட மரமடி கிறிஸ்தவ ஆலயம் கட்டுமானம் மற்றும் ஆக்கிரமிப்பு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் பீட்டர் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண்.WP (MD) NO.23539/2015 —க்கு எதிர்வாதுரை தாக்கல் சென்னை வழக்கறிஞர் கூடுதல் செலவுத் தொகையாக ரூ.5,000/—ஐ திரு.கிருஷ்ணதாஸ், வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.சி1/45/2016

**தீர்மானம் எண்.1518, தீர்மானிக்கப்பட்டது**